அசல் வழக்கு – 28/2017
நாள் : 09.01.2025
வா.சா. : 1
பெயர் : காந்தி, த/பெ. குமாரசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி மாலதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் உளுந்துக்குப்பையில் ஜெகதகுரு என்ற ஒரு VAO இருந்தார் அவர் மற்றும் கிருஷ்ணமூரத்தி, சீனிவாசன், ராமச்சந்திரன் ஆகிய நால்வரும் மாலதியை என்னிடம் அழைத்து வந்து அறிமுகபடுத்தினார்கள். நான் அப்போது இடம் வாங்கும் ஐடியாவில் இல்லை. அந்த VAO தற்போது உயிருடன் இல்லை. மேற்படி நான்குபேரும் தான் மாலதியை எனக்கு அறிமுகப்படுத்தியதாக வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரி. நான் மாலதியிடம் போட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் 17.08.2016 முதல் 16.11.2016 வரை மூன்று மாத காலத்திற்குள் கிரயத்தை பூர்த்தி செய்யவேண்டுமென்று கால கெடு விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த மூன்று மாத காலத்திற்குள் கிரயத்தை பூர்த்தி செய்யவேண்டுமென்ற எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. கிரய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட காலக்கெடு முடிந்து 11 மாதம் கழித்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. 11 மாத கால தாமதமாக வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி. மேற்படி வழக்கு நாகப்பட்டிணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோது நீதிமன்றம் வழக்கறிஞர் M. ரவி என்பவர் மைனர் அபினாஷ்க்கு கோர்ட் கார்டியனாக நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரி. நான் சொல்லித்தான் அந்த கோர்ட் கார்டியனை ரத்து செய்வதற்காக மாலதி மனுத்தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு GWOP 12/2016 என்ற மனு மாலதி தாக்கல் செய்து

இந்த வழக்கு சொத்து குறித்து கிரயம் செய்ய அனுமதிபெறப்பட்டது என்றால் சரி. இந்த வழக்கில் சாட்சியான ராமச்சந்திரன், த/பெ. தங்கராசு என்பவர் மேற்படி GWOP 12/2016 வழக்கிலும் சாட்சி என்றால் சரி. மேற்படி ராமச்சந்திரன் என்பவர் நான் சொல்லித்தான் மேற்படி GWOP 12/2016 வழக்கில் சாட்சி சொன்னார் என்றால் சரியல்ல. அதற்கும் எனக்கு சம்பந்தம் இல்லை. மேற்படி GWOP 12/2016 என்ற வழக்கில் கிரய அட்வான்ஸ் தொகையை வங்கியில் மைனர் பெயரில் Deposit செய்யவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் ஜெகதகுரு அப்படி Deposit செய்ய வேண்டுமென்று சொன்னார். ஆனால் மாலதி அப்படி Deposit செய்யவில்லை. நான் கிரய அட்வான்ஸ் தொகை 10 லட்சத்தை வங்கியில் deposit செய்யும்படி மாலதியிடம் சொன்னதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி. ஆனால் மாலதியிடம் வங்கியில் டெபாசிட், செய்யும்படி சொன்னேன். 5 லட்சம் ரூபாய்க்கு Axis bank NRI cheque ம் டெபாசிட் செய்ய சொல்லி கொடுத்தேன். கிரய ஒப்பந்த தேதியன்று நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் செக் தான் கொடுத்தேன் என்றால் அதற்கு முன்பே 5 லட்சம் ரூபாய் பணமாக கொடுத்து அதை அவர் செலவு செய்து விட்டதால் அன்றைய தினம் செக்காக கொடுத்தேன். அந்த காசோலை தொகையை மாலதி கலக்சன் போட்டு பெற்றுக்கொண்டார் என்பதற்கு வங்கியின் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வெற்றுக்காசோலைதான் மாலதிக்கு கொடுத்தேன் என்றாலும் அதனால் அவர் அந்த காசோலையை வைத்து எந்த பணமும் பெறவில்லைஎன்றால் சரியல்ல. அவர் காசோலை தொகையை பெற்றுக்கொண்ட பேங்க்

K. Ganhi

ஸ்டேட்மெண்ட் போடுகிறேன். மேற்படி GWOP 12/2016 வழக்கில் கிரய அட்வான்ஸ் தொகையை வங்கியில் டெபாசிட் செய்து அதற்குண்டான வட்டித்தொகையை மாலதி பயன்படுத்தி கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் தொகையை அவர் தான் வங்கியில் டெபாசிட் செய்யவேண்டும் டெபாசிட் செய்வதாக சொல்லிதான் வாங்கினார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் மாலதி அட்வான்ஸ் தொகையை வங்கியில் டெபாசிட் செய்யவில்லை என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி GWOP 12/2016 யில் போடப்பட்ட உத்தரவு விவரங்களை தெரிந்த பிறகு தான் கிரய ஒப்பந்தம் போட்டேனா என்றால் ஆமாம். மேற்படி GWOP 12/2016 வழக்கில் மைனருக்கான சொத்தின் மதிப்பு வெறும் 80 ஆயிரம் என்று மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி சொத்தின் சர்வே நம்பர், விஸ்தீரணம் மற்ற சொத்து விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்திற்கும் மேற்படி GWOP 12/2016 வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரி. சாட்சி மீண்டும் சம்பந்தம் உள்ளது என்று கூறுகிறார். மாலதி GWOP போடுவதற்கு முன்பு என்னிடம் கலந்து ஆலோசணை செய்து அந்த மனுவை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. கிரய உடன்படிக்கை போடுவதற்கு முன்பு மாலதியிடம் GWOP போடும்படி சொன்னேனா என்றால் இல்லை. அவர் GWOP போட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிரய உடன் படிக்கையின் 1 வது பாராவில் இந்த முழுசொத்திற்கும் உரிமையாளர் மைனர் அபினாஷ் மட்டும் தான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஒப்பந்ததின் 3 வது பத்தியில் சில கண்டிசன் போடப்பட்டுள்ளது என்றாலும் அந்த

K. Rathi

நிபந்தனைகளில் இளவர் அபினாஷ் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரி. GWOP Order வந்துவிட்டதால் சொல்லவில்லை. கிரய உடன் படிக்கையின் 4 வது பாராவில் 5 லட்சம் தொகையாக கொடுத்ததாகவும் 5 லட்சத்திற்கு காசோலை கொடுத்ததாக மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் அந்த காசோலை Return ஆகவில்லை. அதற்கான தொகையை மாலதி எடுத்து கொண்டார். 5 லட்சம் ரொக்கம் மற்றும் 5 லட்சம் காசோலையாக கொடுத்துவிட்டு முழு தொகையும் பெற்றுக்கொண்டார் என்று கிரய அக்ரிமெண்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. கிரய ஒப்பந்தத்தில் 14 லட்சம் தொகையை மூன்று மாத காலகட்டத்திற்குள் கொடுத்துவிட்டு கிரயத்தை பூர்த்தி செய்துகொள்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. 14 லட்சம் ரூபாயில் மீதமுள்ள தொகையை மாலதியிடம் கொடுக்க என்ன முயற்சி செய்தேன் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 4 லட்சம் பணம் ரெடியாக வைத்திருப்பதாக மாலதியிடம் சொன்னேன் அவர் எங்கு வாங்கி வைத்துக்கொள்வது என்று கேட்டார். அப்போது பணமதிப்பிழப்பு அறிவிக்கப்பட்டதால் அந்த பணத்தை வாங்கி எங்கு வைத்துக்கொள்வது என்று கேட்டார். கிரய ஒப்பந்தத்தின் 6 வது பத்தியில் இதில் கண்ட காலக்கெடு என்பது அதில் கண்ட ஷரத்துகளில் முக்கியமான அம்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. (வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒதத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/1/23

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை